# இரத்தினபுரி மாநகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 08 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 22 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 21 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரத்தினபுரி மாநகர சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைக்குச் சொந்தமான நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் இரத்தினபுரி வாடி வீடு தொடர்பாக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு முடிவு வரை நகாப்புற அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முகாமைத்துவக் கட்டணத்தின் நூற்றுக்கு 70 சதவீதமாகிய ரூபா 2,682,419 கடன்பட்டோரின் கீழ் கணக்கிலிடப்படவில்லை. மீளாய்வாண்டின்போது அதன் வருவாய் ரூபா 925,559 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையால் மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமுலாக்கப்படும் செயற்திட்டங்களுக்கான

கடனைத் தீர்த்து வைப்பதற்காக வாடி வீட்டு முகாமைத்துவக் கட்டணத்தின் 50 சதவீதத்தைத் தடுத்து வைப்பதற்கு நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்த போதும், குறித்த சீராக்கல் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டினது தீர்வை, வரிப் பட்டியல், பிடி ஆணைக் கட்டணம் மற்றும் மேலதிக வரவு வைப்பு என்பன ரூபா 25,229,948 ஆகும். எனினும், அது ரூபா 24,311,409 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ரூபா 918,539 குறைவாகக் கணக்குகளில் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) தீர்வை, வரி என்பவற்றினது ஆரம்ப நிலுவை மீதி ரூபா 21,861,507 ஆகும். எனினும், 2012 ஆம் ஆண்டிற்கான கணனிப் பிரதியின் பிரகாரம் தீர்வை வரியினது ஆரம்ப நிலுவை மீதி ரூபா 22,147,954 ஆகும்.

(உ) தீர்வை வரி என்பவற்றினது ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 26,143,339 ஆகும். எனினும் 10 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் திர்வை வரிக் கணக்கில் கணக்கிலிடப்பட்ட தொகை 25,332,439 ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டிற்கான சொத்துக் கடன் வட்டி மீளளிப்பு வருவாய் ரூபா 1,304,323 ஆகும். எனினும், மார்ச் மாத வருவாயௗன ரூபா 101,308 மாத்திரமே கணக்கிலிடப்பட்டிருந்தது. அதற்கமைய, ஆண்டிற்கான வருவாய் ரூபா 1,203,019 குறைத்துக் காட்டப்பட்டு ஊழியர் கடன் கணக்கில் ரூபா 1,095,249 கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டுகளின் பொருட்டான சொத்துக் கடன் வட்டி மீளளிப்பு ரூபா 1,295,024 ஆகும். இது சொத்துக் கடன் வட்டி மீளளிப்புக் கணக்கிலிடப்படவேண்டுமாயினும், குறித்த பெறுமதி ஊழியர் கடன் கணக்கிலிடப்பட்டிருந்தது. அதற்கமைய, பெற வேண்டிய ஊழியர் கடன் கணக்கு மீதி இதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முற் பெறுவனவுகள் எதுவுமே இல்லாதபோதும், பேரேட்டுக் கணக்கில் முற் பெறுவனவாக ரூபா 1,191,125 கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பிரதான பஸ் தரிப்பிடக் கட்டணமாக சபரகமுவ பஸ் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 360,000 க்கு விலைப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை.

(ஒ) மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக மீளாய்வாண்டில் பெறப்பட்ட அதி குறைந்த ஒரே தடவையில்

பெறப்படும் தொகையான ரூபா 4,677,179 மற்றும் புலுகுபிடிய பொதுக் கழிவறையின் அருகே உள்ள காணியைக் குத்தகைக்கு வழங்குவதால் ஒரே தடவையில் பெறப்படும் ரூபா 2,600,000 என்பன மீளாய்வாண்டினது வருவாயிலிடப்படாது நானாவித வைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் மாநகர அங்கத்தவர் படி வருவாய்த் தலைப்பு இலக்கம் 10371 (2) இல் செலவு வைக்கப்பட வேண்டிய தொகை ரூபா 1,392,000 ஆகும். எனினும், மோட்டார் சைக்கிள் கடனிற்கான தவனைப்பணமாகிய ரூபா 240,000 கழித்துக் கொள்ளப்பட்டதையடுத்து வருவாயாக ரூபா 1,152,000 மாத்திரமே கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஔ) உள்ளூர்க் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தரின் 2012 ஜுலை 24 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பொதுச் சந்தையின் அணுகு பாதை மற்றும் பல நடவடிக்கைக் கட்டிட நிர்மாண வேலைச் செயற்திட்டத்திற்கான மீளாய்வு ஆண்டு முடிவுக் கடன் தொகை ரூபா 37,553,724 ஆகும். எனினும், குறித்த கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 28,002,506 ஆகவிருந்தது.

(அஅ) அணுகு பாதை மற்றும் பல நடவடிக்கைக் கட்டிட நிர்மாண வேலை தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 13,002,117 வருவாயிலிடப்படவில்லை.

(அஆ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் சேர்ந்து நின்ற அடிப்படையில் கணக்கிலிடப்பட வேண்டுமாயினும், முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 16,701,616 ஆண்டின் வருவாயாகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டினது வருவாய் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(அஇ) மீளாய்வாண்டின் நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான முத்திரைக் கட்டணம் இனங்காணப்படவில்லை. இனங்காணப்பட்ட பெறுமதியில் ரூபா 11,097,970 தொடர்பாக எதுவித தகவல்களும் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை. மேலும் 2011 ஜீன் முதல் டிசெம்பர் வரையான ரூபா 7,189,966 பெற வேண்டிய வருவாயாக கணக்கில் வெளிக்கொனரப்படவில்லை.

(அஈ) மாநகர முதல்வருக்கான உத்தியோகபூர்வ வாகனத்தைக் கொள்வனவு செய்கையில் ரூபா 11,735,400 செலவாகியது. இதில் ரூபா 7,000,000 குறித்த செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்படவில்லை. சபையினது செலவினம் குறித்த தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(அஉ) மீளாய்வாண்டு இறுதியிலான ஊழியர் கடன், கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலை, இடைக்கால கட்டு நிதி (முற்பணம்) என்பவற்றினது கணக்கு

மீதிகள், ஐந்தொகை, பதிவேடுகள் என்பவற்றுக்கிடையே ரூபா 1,075,112 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(அஊ) கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போதிலான 2012 ஆம் ஆண்டினது வருவாய் விடயங்கள் 13 க்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 15,131,125 ஆகும். உப பதிவேடுகளின் படி கணக்குகளதும் மீதியினதும் கூட்டுத்தொகை ரூபா 13,394,027 ஆகும். இதனால் அவதானிக்கப்பட்ட வேறுபாடு ரூபா 2,580,501 ஆகும்.

(அஎ) மீளாய்வாண்டினது உள்ளபடியான கடன்பட்டோர் பெறுவனவு ரூபா 30,806,900 ஆகும். எனினும், வருவாய்க் கடன்பட்டோர் கணக்கில் ரூபா 30,712,524 மாத்திரமே கணக்கிலிடப்பட்டிருந்தது.

(அஏ) சபையின் வாக்குப் பணப் பேரேடு நாளது வரையாக்கப்படாததால் கணக்காய்வுத் தெரிவுச்செவ்வையின்போது 61 செலவின விடயங்களில் வாக்குப் பணப்பேரேட்டிற்கும் செலவின வகைப்படுத்தலுக்குமிடையே ரூபா 365,642,482 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 33 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படாதிருந்தன. அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி ரூபா 348,606,901 ஆகும்.

#### (ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 117,377,383 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 17,168,213 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,281,551 ஆகும்.

## 2.2 தீர்த்து வைக்கப்படாத கணக்குகள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத நெடுங்காலக் கடன் கணக்குப் பதிவேடுகளது கூட்டுத்தொகை ரூபா 69,382,992 ஆகும்.

## 2.3 வங்கிக் கணக்கிணக்கம்

(அ.) வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்து விட்ட ரூபா 2,173,164 பெறுமதியான 77 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடடிக்கை எடுக்கப்படவில்லை

(ஆ.) ஒன்று முதல் 5 ஆண்டுகாலமாகக் கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 302,179 கூட்டுத்தொகையுடைய 6 காசோலைகள் சம்பந்தமாக அறவிடப்படாத வருமானத்தை அறவிடுவதற்கோ அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 வருவாய் நிர்வாகம்

### 2.4.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மாநகர முதல்வரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாயினது தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 22,319 | 26,436 | 19,807 |
| (ii) | குத்தகை வாடகை | 48,211 | 36,606 | 11,605 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,665 | 2,027 | 638 |
| (iv) | பிற வருவாய் | 16,874 | 23,830 | - |

**2.4.2 தீர்வையும் வரியும்**

மீளாய்வாண்டினது தீர்வை, வரி வருவாயில் ரூபா 128,525 அமைச்சரின் அங்கீகாரமின்றி சபையின் தீர்மானத்திற்கேற்ப வரியோர்க்கான வரி விலக்கு அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.4.3 குத்தகை வாடகை**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) குத்தகை வாடகைப் பதிவேட்டின்படி, 452 காணி வரிக் கூறுகள் உள்ளன. எனினும், அதனை நாளது வரையாக்கிய தகவலாக கணக்காய்வில் திருப்தியுற முடியவில்லை. அவ்வாறே, ஆண்டின்போது காணி மதிப்பீடு செய்யப்பட்டு காணிக் குத்தகை அறவிடப்படவோ அல்லது உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படவோ இல்லை. 42 உடன்படிக்கைகள் மாத்திரமிருந்தன. காணிக் குத்தகையானது காலாண்டுக்கு ஒரு முறை 37 வீதம் 75 வீதம் என மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) காணிக் குத்தகை அறவிடப்படும் 452 கூறுகளில் 103 கூறுகளில் ரூபா 5,000 க்கு மேற்பட்ட மீதிகளாக 2013 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில் நிலவிய தொகை ரூபா 3,041,966 ஆகும்.

(இ) மேற்படி 452 காணிக் குத்தகைக் கூறுகளில் 22 கூறுகளுக்கு விலைப்பட்டியலிடப்படுவது நெடுங்காலமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இடை நிறுத்தப்பட்டதற்கான எதுவித அடிப்படையும் கணக்காய்வில் புலனாகாதிருந்தது. அந்த 22 கூறுகளில் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 30,146 ஆகும்.

**2.4.4 பிற வருவாய்**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) மீளாய்வாண்டு முடிவிலான பொதுச் சந்தை கடை நிலுவை ரூபா 571,965 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் சபைக்குரிய இரத்தினபுரி வாடி வீட்டு முகாமைத்துவக் கட்டணப் பெறுவனவுகளின் 20 சதவீதமாகிய ரூபா 766,405 சபையின் நிதியத்திலிடப்படுவதற்கான எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(இ) பஸ் தரிப்பிடக் கட்டணமாக மாநகர சபைக்கு சப்ரகமுவ பஸ் கம்பனியிடமிருந்து 2003 தொடக்கம் 2012 வரை 7 ஆண்டுகளில் பெறவேண்டிய வருவாய் ரூபா 1,320,000 ஆகும்.

(ஈ) நியூலக்ஷ்மி சினிமாக் கொட்டகை அமைந்துள்ள கட்டிடத்தின் வாடகை நிலுவையான ரூபா 697,500 மீளாய்வாண்டிலேனும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(உ) இரத்தினபுரி பஸ் தரிப்பிடக் கழிவறையினது 2012 ஏப்ரல் மற்றும் மே மாதக் கட்டண நிலுவை ரூபா 450,605 ஆகும். இதனைக் குறித்த குத்தகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அக்கழிவறைத் தொகுதியில் நீர் மானி அமைக்கப்படாமையால் நீர்க்கட்டணத்தைக் கணிப்பிட்டு குத்தகையாளரிடமிருந்து அது அறவிடப்படாதிருந்தது.

(ஊ) மாநகர சபைக்குரிய பொதுச் சந்தையின் 49 கடைகளில் 6 கடைகள் மீளாய்வாண்டின்போது எதுவித வருவாயும் பெறப்படாது மூடப்பட்டிருந்தன.

**2.4.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் இனங்காணப்பட்டு அறவிடப்படவில்லை.

**2.5 தண்டப் பணம்**

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 226(1) ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டப் பணம் சம்பந்தமாக 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 124,467 ஆகும்.

(ஆ) எதிர் காலத்தில் ரூபா 15,004,761 கூட்டுத்தொகையுடைய 9 கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக என்னால் தண்டப்பண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எண்ணப்பட்டுள்ளது.

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையெதுவுமின்றி 2012 மே மாதத்தில் ரூபா 400,000 பெறுமதியான 500 சீமெந்து மூடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) எரிபொருள் முற்பணத்தைத் திர்த்து வைக்கையில் சமர்ப்பிக்கப்படும் விலைப்பட்டியலில் வாகன இலக்கம் காணப்பட வேண்டுமாயினும், அவ்வாறு இலக்கிமிடப்படாத எரிபொருளுக்கென ரூபா 57,341 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நகர சபை பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புக்கு ஏற்ப தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து மீளாய்வாண்டின்போது ரூபா 2,340,000 பெறுமதியான 500 நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

குறித்த நாற்காலிகள் குறித்த வடிவமைப்புக்கு உட்படாத போதும், குறித்த வடிவமைப்புகளுடனானவை என தொடர்புடைய பெறுவனவுத் தாள்களில் உத்தியோகத்தர்களால் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

(அ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 14,575,609 மதிப்பீட்டுக் கிரயத்திலான 43 செயற்திட்டங்களுக்கு மதிப்பிடப்பட்டபோதும், சகல செயற்திட்டங்களும் அமுலாக்கப்படவில்லை.

(ஆ) வேலைத் தளங்களில் பெறப்படும் கொடுப்பனவு மற்றும் அவற்றின் பாவனை தொடர்பான அறிக்கை வேலைத் தளத்தில் பேணப்பட வேண்டுமாயினும், 2012 மே 24 ஆந் திகதியன்று ரூபா 273,840 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 326 சீமெந்து மூடைகளின் பாவனை தொடர்பான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பபிக்கப்படவில்லை.

## 2.8 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371 க்கமைய இடைக்கால கட்டு நிதி குறித்த வேலை முடிவுற்றதும் தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், 1990 முதல் 2010 வரை 09 சந்தர்ப்பங்கனளில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 17,942,664 கூட்டுத்தொகையுடைய முற்பணமானது கணக்காய்வுத் தினமான 2013 ஜுன் 10 அன்றம் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) சபையின் தீர்மானப்படி, நிலுவையாக உள்ள மின்சாரம் மற்றும் மின்சாரக் களஞ்சியக் கணக்கு மீதிகளது ரூபா 24,175,270 கூட்டுத்தொகையை இனங்காணாது கணக்கிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் அவை இனங்கானப்படாதிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போதுஎதுவித அங்கீகாரமும் இல்லாதது 4 செலவின விடயங்களின் ரூபா 5,066,085 நிதியேற்பாடு மாற்றத்திற்குள்ளாகியிருந்தது.

(ஈ) வேலை இட மாற்றம் பெற்றுச் சென்ற 55 ஊழியர்களிடமிருந்து ரூபா 823,919 இடுக்கடன் முற்பண மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது.

(உ) மாநகர சபைக்குச் சொந்தமான லக்ஷ்மி சினிமாக் கொட்டகை பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. பொருளாதார ரீதியாக மிகப் பெறுமதி வாய்ந்த கட்டிடத்தை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்குக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(ஊ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 க்கமைய ரூபா 458,450 க்கான காலங் கடந்த வைப்புகளைத் தீர்த்து வைக்காது அசைவற்ற நடைமுறைச் அவை சொத்தாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(எ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 136(ஆ) பிரகாரம் மீளாய்வாண்டின்போது ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு 56 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. அவ்விண்ணப்பங்களுக்குரிய 16 மரங்கள் தரிக்கப்பட்டிருந்தன. 10 ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு மாநகர சபை செலவு மேற்கொண்ட போதும், அது தொடர்பாக மாநகர சபை பெற வேண்டிய ரூபா 444,915 அறவிடப்படுவதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. குறித்த வருவாய் மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இடைக்கால அடிப்படையில் வேலை பெறப்படுவதாயின் அதற்கு ஏதாவதுதொரு குறிப்பிடத்தக்க பணி நிலவ வேண்டும். அதற்கான செலவினம் மற்றும் குறித்த பணி ஆரம்பமாகும், மற்றும் முடிவடையும் காலப்பகுதிக்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்படவும் வேண்டும். எனினும், அவ்வாறால்லாது 2011 டிசெம்பர் 28 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத் தீர்மானம் 154 க்கமைய கட்டிடப் பிரிவுக்கு

ஆட்சேர்க்கப்பட்ட 74 இடைக்கால அடிப்படையில்லான ஊழியர்களுக்கு 2012 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 5,002,775 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரச நிறுவனங்களில் தற்காலிக, சமயாசமய, பிரதீயீட்டு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும்போது வெற்றிடமாக உள்ள நிரந்தர பதவியுடன் தொடர்புடையதாக சட்ட பூர்வ சேவை உடன்படிக்கையின் மீதே ஆட்சேர்ப்பு நடைபெற வேண்டும். எனினும், அவ்வாறு முறையான சேவை உடன்படிக்கையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படாத 167 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 14,453,098 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சமயாசமய மற்றம் பிரதியீட்டு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு நாளாந்த அடிப்படையில் சம்பளத்தை வழங்குகையில் ஒவ்வொரு ஊழியரது சம்பளக் கணிப்பிற்குமான நாட்களின் எண்ணிக்கை பணியாற்றிய நாட்களுடன் வேறுபட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் புலனாகியது.

(ஈ) மாநகர சபையின் 5 வகைப் பதவிகளுக்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரத்தைப் பெறாது 7 நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அப்பதவிகளுக்கான சம்பள மீளளிப்பும் நடைபெற்றிருந்தது.

(உ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் கணிப்பிற்கமைய 89 பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவியபோதும், 201 ஊழியர்கள் சமயாசமய, பிரதீயீட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டதன் மூலம் பதவி வெற்றிடங்களுக்கும் மேலாக தலைமைச் செயலாளரது நவம்பர் 16 ஆந் திகதிய 01/2010 மற்றும் 2010 அறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு மேலாக 112 ஊழியர்கள் ஆட் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஊ) தலைமைச் செயலாளரதும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரமின்றி 2010,2011,2012 ஆம் ஆண்டுகளின்போது சமயாசமய பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களுக்கு முறையே ரூபா 17,008,859, ரூபா 19.202,064, ரூபா 29,193,687 என சபையின் நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளுக்கல்லாது வேறு பதவிகளுக்கான சேவையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2.10 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி நகர எல்லைக்குட்பட்ட 22 கிலோமீட்டர் பிரதான பாதையிலும் 15 கிலோமீட்டர் உள் வீதியிலும் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்கள் கனதொல பிரதேசத்தில் அகற்றப்படுகின்றன. கழிவுப் பொருட்களை அகற்றும் இடத்திற்குள் கொண்டு வரப்படும் கழிவுப் பொருட்கள் முறையற்றவாறு அங்குள்ள மலைச்சரிவில் கீழ் நோக்கித் தள்ளப்படுவது புலனாகியது. அவ்வாறே இக் கழிவுப் பொருட்கள் தற்போது தீப்பற்றியவாறு இருப்பதால் சுற்றாடலில் தீங்கு விளைவிக்க கூடிய வாயு வெளியேறுவதைக் கருத்திற் கொண்டு அவ்வாறிருப்பின் அதனைத் தணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மாநகர சபை கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் கனதொல கழிவுப்பொருள் அகற்றும் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 4,391,264 ஆகு செலவு மதிப்பீட்டில் ரூபா 2,355,000 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்கூறு முறையாகப் பேணப்படாது தோல்வியடைந்தமையால் ஏறக்குறைய 5 ஆண்டுகளாக அப்பகுதிக்கு எடுத்து வரப்படும் மலக் கழிவுகளும் அங்கு அகற்றப்படுவது புலனாகியது. மாதாந்தம் 70-75 கியூப் கழிவுகள் இவ்வாறு மாநகர சபையால் அகற்றப்படுவதுடன் குறுவிட்ட பிரதேச சபையிலிருந்து கொண்டு வரப்படுவனவும் அத்திறந்த சுற்றாடலில் அகற்றப்படுவது மேலும் புலனாகியது.

இத் திருப்தியளிக்காத நிலைமையானது பொதுமக்களது சுகாதாரத்துக்கும் சுற்றாடலுக்கும் தீங்கு விளைவிப்பதாக அவதானிக்கப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான 25 ஏக்கருக்கு மேற்பட்ட கனதொல கழிவு அகற்றப்படும் இடத்தில் அத்துமீறிய குடியேற்றவாசிகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. இச் சொத்தைப் பாதுகாப்பதற்கு மாநகர சபை பாதுகாப்பு அரண்களை அமைக்காததுடன் அத்துமீறிக் குடியேறியோரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவு திட்டக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) சொத்து முகாமைத்துவம்
(எ) மனிதவள முகாமைத்துவம்
(ஏ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்